**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**

**<u>அசல் வழக்கு எண். 148/2021</u>**

**<u>நாள் 18/12/2024 புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ராஜா | த/பெயர் – முனுசாமி |
| வயது – 50 | தொழில் – |
| விலாசம் – எண் 74, கிருஷ்ணன் தெரு, வளசரவாக்கம், சென்னை – 87. | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

பிரியாவிற்கு கிரையம் செய்த கைலாசம், வசந்தா எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவினர் அல்ல. நான் கைலாசம் என்பவரின் வளர்ப்பு மகன் என்றால் சரியல்ல. மேற்படி கைலாசத்தை சாட்சியாக விசாரித்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை. மேற்படி பிரியா கைலாசத்தின் மனைவி வந்தாவின் மருமகள் என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையில் வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று விளம்புகை செய்யவும் அதன் தொடர்ச்சியாக வழக்கு சொத்தில் பிரதிவாதி கட்டியுள்ள கட்டிடத்தை அகற்றி சுவாதீனத்தை ஒப்படைக்க கேட்டும் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தில் தார்பாய் கொட்டகை மட்டும் அமைத்து வேலை செய்து வருகிறார். நான் தார்பாய் கொட்டகை என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் வழக்குரை ஆங்கிலத்தில் உள்ளதால் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

கைலாசம் மேற்படி சொத்தை முனுசாமி, ஏழுமலை ஆகியோரிடம் வாங்கினார். கைலாசத்தின் மகனுக்கு முனுசாமியின் மச்சினிச்சியை திருமணம் செய்துவைத்துள்ளார் என்றால் சரிதான். முனுசாமி மற்றும் ஏழுமலையும் கைலாசத்திடம் சொத்து பத்திரத்தை அடமானம் வைத்து ரூபாய் 2,00,000/- கடன் பெற்றபோது மேற்படி கைலாசம் ஏமாற்றி பொது அதிகார பத்திரத்தில் கையொப்பம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சொத்து பொன்னேரியிலும் பொது அதிகார பத்திரம் விருகம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கைலாசத்திடம் ஏழுமலையும் முனுசாமியும் ஜூன் 2011 வரை வட்டி செலுத்திவருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**